# கடக்கிட்டி முடக்கிட்டி



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# கடக்கிட்டி முடக்கிட்டி

வயதான கிழவன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் ஏழை. அவனுக்கு உதவி செய்பவர்கள் யாருமே இல்லை. அதனால் அவன் தானே பாடுபட்டுப் பணம் சம்பாதித்தால் தான் பிழைக்க முடியும்.

அவன் ஒரு அடர்ந்த காட்டுக்குப் பக்கத்தில் சிறிய குடிசை ஒன்று போட்டுக்கொண்டான். அந்தக் காட்டில் நாள்தோறும் விறகு ஒடித்து வருவான். பிறகு அதைச் சுமையாகக் கட்டுவான். பக்கத்தில் இருந்த ஒரு பட்டணத்தில் அதை விற்று, அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வயிறு வளர்த்து வந்தான்.

ஆனால், விறகுச் சுமையைத் தலையில் வைத்துக் கிழவனால் சுமந்து செல்ல முடியுமா? அதற்காக அவன் ஒரு கழுதையை வளர்த்து வந்தான். அந்தக் கழுதையின் மேல் விறகுக் கட்டை வைத்துப் பட்டணத்திற்கு ஓட்டிச் செல்லுவான். விறகு விற்று வரும் பணத்தைக் கொண்டு சமையலுக்கு வேண்டிய அரிசி பருப்பு முதலியவற்றை வாங்கி வருவான். இப்படி அவன் வாழ்நாள் கழிந்து கொண்டிருந்தது.

இளம் வயதிலிருந்தே அந்தக் கழுதை விறகைச் சுமந்து சென்றதால் அதன் பின் கால்கள் இரண்டும் கொஞ்சம் கொஞ்சமாக உள் பக்கம் வளைந்து விட்டன. அதனால் அந்தக் கழுதை நடக்கும்போது பின்கால்கள் ஒன்றோ டொன்று இடித்துக்கொள்ளும். அப்படி இடித்துக்கொள்ளும்போது "கடக்கிட்டி முடக்கிட்டி, கடக்கிட்டி முடக்கிட்டி" என்று சத்தம் கேட்கும். கழுதை விரைவாக ஓடும் போது இந்தச் சத்தம் மேலும் அதிகமாகக் கேட்கும். அதனால் அந்தக் கழுதைக்குக் கிழவன் 'கடக்கிட்டி முடக்கிட்டி' என்றே சொல்லமாகப் பெயர் வைத்துவிட்டான்.

பட்டணத்திலிருந்து மாலை நேரத்தில் திரும்பிய பிறகு கிழவன் சமையல் செய்யத் தொடங்குவான். அதற்காக அரிசியையும் பருப்பையும் தண்ணீரில் தனித்தனியாகப் போட்டு அரித்து உலையில் இடுவான். அப்படிச் செய்வதால் கிடைக்கும் கழுநீரைத் தன் கழுதைக்கு வைப்பான். கழுதையும் ஆவலோடு அதைக் குடித்துவிட்டுக் குடிசைக்குப் பக்கமாக வெளியே புல் மேயச் செல்லும். நன்றாக இருட்டும் வரையில் அது மேய்ந்து விட்டுக் குடிசைக்கு வந்துவிடும்.

“அதுவா? அது எங்கள் அருமையான பட்டப்பெயர்” என்று கழுதை தலையை நிமிர்த்திக்கொண்டு சொல்லிற்று.

“யார் அப்படிப் பட்டம் கொடுத்தார்கள்?”

“நம் சிங்க ராஜாதான் கொடுத்தார். வேறு யார் கொடுப்பார்கள்?”

“எதற்காக அப்படிப் பட்டம் கொடுத்தார்?”

“எல்லாம் எங்கள் வீரச்செயலைப்பற்றி அறிந்து தான் கொடுத்தார். மூத்த அண்ணன் நூறு புலிகளைச் ‘சடக்’ என்று கடித்துக் கொன்றார். சின்ன அண்ணன் இருநூறு புலிகளை ‘மடக்’ என்று கடித்தெறிந்தார். நான் அவர்களையெல்லாம் மீற வேண்டுமென்று இதுவரை இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது புலிகளை ‘கடக்’ என்று கடித்துக் கொன்றிருக்கிறேன். இன்னும் முந்நூறு ஆகவில்லை. நல்ல வேளை. இப்பொழுது நீ வந்து அகப்பட்டிருக்கிறாய். உன்னையும் ‘கடக்’ என்று கடித்துக் கொன்று விட்டால் சரியாக முந்நூறு ஆகிவிடும்” என்று கடக்கிட்டி முடக்கிட்டி தனது வாயைத் திறந்து பல்லைக் காட்டிற்று.

புலி பயந்து ஓடியே போய்விட்டது. கழுதையின் பல்லையெல்லாம் பார்க்க அது நிற்கவே இல்லை. தப்பினால் போதும் என்று ஓடிவிட்டது.

‘பசும் புல்லின் மேலிருந்த பேராசையால் உயிருக்கே ஆபத்து வந்து விடும் போலிருந்தது. நல்ல வேளை. தைரியத்தை இழக்காமல் அறிவைப் பயன்படுத்தித் தப்பினேன். இனி மேல் இவ்வளவு தூரம் வரவே மாட்டேன்’ என்று எண்ணிக்கொண்டே கிழவனுடைய குடிசையை நோக்கி வேகமாகக் கழுதை நடந்தது. அப்பொழுது பின் கால்கள் ‘கடக்கிட்டி முடக்கிட்டி, கடக்கிட்டி முடக்கிட்டி’ என்று சத்தம் செய்வதைக் கேட்க வேண்டுமே!

கடக்கிட்டி முடக்கிட்டி இவற்றைக் கண்டதும் மறுபடியும் குதிரையின் மேல் ஒய்யாரமாக ஏறிக்கொண்டு உரத்த குரலில் பேசத் தொடங்கிற்று:

“நரி மாமா, அந்தப் புலியை உன் வாலில் கட்டி இழுத்துக் கொண்டு வர இவ்வளவு நேரமா? எனக்குப் பசி தாங்க முடியவில்லை. இழுத்து வா அந்தப் புலியை” என்று அது அதட்டும் குரலில் கூறிற்று. குதிரையும் முன்னால் பாய்ந்தது.

குள்ள நரி தன்னை வஞ்சகமாக ஏமாற்றி விட்டதாக நினைத்துப் புலி, உடனே காட்டுக்குள் ஓடத் தொடங்கிற்று. பாவம், குள்ள நரியின் வால் கெட்டியாகப் புலியின் வாலோடு முடியப்பட்டிருந்ததால் அது தரையிலும் மரங்களிலும் பாறைகளிலும் அடிபட்டுக் கொண்டே சென்றது. குள்ள நரி எவ்வளவு சொன்னாலும் புலி கேட்பதாக இல்லை. அது தாவித்தாவிச் சென்றது. புலி அந்தக் காட்டை விட்டு வெகு தூரம் ஓடிய பிறகுதான் சற்று இளைப்பாற நின்று பார்த்தது. இதற்குள் தலையிலும் உடம்பிலும் அடிபட்டுக் குள்ள நரி இறந்து போயிற்று.

கிழட்டுக் குதிரையும் கடக்கிட்டி முடக்கிட்டியும் தந்திரத்தால் உயிர் தப்பின. என்றாலும், குதிரைக்குக் காட்டுப்பக்கத்தில் வாழவே பிடிக்கவில்லை

“எங்கள் பட்டணமே நல்லது. அங்கு புலியெல்லாம் கிடையாது. அங்கே வசிப்பதைப் போல வேறு எங்கும் சுகமாக வசிக்க முடியாது. நான் அங்கேயே போகிறேன்” என்று சொல்லிவிட்டு வந்த வழியிலேயே நடக்கத் தொடங்கிற்று. கடக்கிட்டி முடக்கிட்டி எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அது கேட்கவில்லை. “காட்டில் மின்சார விளக்கே இல்லை. எல்லாம் ஒரே இருட்டு. கார் சத்தத்தைக் கூடக் கேட்க முடியவில்லை. இங்கு என்னால் ஒரு நொடியும் வாழ முடியாது” என்று சொல்லி விட்டுக் குதிரை புறப்பட்டுவிட்டது.